www.Padasalai.Net

**பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை-06**

**ந. க. எண்.037970/அ3/இ1/2024, நாள். 12.07.2024**

பொருள்: பள்ளிக்கல்வி - தமிழ்நாடு பொதுப்பணி / அமைச்சுப்பணி அனைத்து வகைப் பணியாளர்களுக்கான மாறுதல் - 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கு மாறுதல் / விருப்ப மாறுதல் வழங்குதல் - GOOGLE MEET LINK - மூலம் கலந்தாய்வு நடத்திட தெரிவித்தல் தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண். 149, பள்ளிக்கல்வி (SE1(1), துறை. நாள். 01.07.2024
2. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) ந.க.எண்.040524/ அ3/இ1/2024 நாள் 10.07.2024

------

பார்வை (1) இல் காணும் அரசாணையின் அடிப்படையில் 30.06.2024 அன்றைய நிலையில், மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே பணியிடத்தில் பணிபுரியும் மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள், கண்காணிப்பாளர்கள்/ பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்கள்/உதவியாளர்கள்/ இளநிலை உதவியாளர்கள்/ சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோர்களுக்கு கலந்தாய்வு நடத்திட ஏதுவாக அவர்களது விவரங்களை மற்றும் விருப்பமாறுதல் கலந்தாய்வு விண்ணப்பதைEMIS தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் கலந்தாய்வு குறித்து தேதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பார்வை (2)ல் காணும் செயல்முறைகள் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஒரே அலுவலகத்தில் 3ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிபவர்களுக்கான மாறுதல் / விருப்ப மாறுதல் / மனமொத்த மாறுதல் மாவட்டத்திற்குள் வழங்குவதற்கான கலந்தாய்வு GOOGLE MEET வழியாக இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நாட்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதால் , கீழ்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றிகலந்தாய்வு நடத்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்டத்திற்குள் கலந்தாய்வு GOOGLE MEET வழியாக நடத்த ஏதுவாக, அதற்கான LINK-ஐ உருவாக்கி சார்ந்த பணியாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

பணியாளர்கள் தற்போது பணிபுரியும் பள்ளி / அலுவலகத்திலிருந்து GOOGLE MEET வழியாக மாறுதல் கலந்தாய்வில் கலந்துகொள்ள வேண்டும்.

www.Padasalai.Net

**3ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிபவர்களுக்கான முன்னுரிமை (Priority)**

1. 40% சதவீத கண்பார்வையற்றவர்கள் மற்றும் 40% சதவீத மாற்றுத்திறனாளிகள்.
2. மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்.(உரிய அலுவலரால் அளிக்கப்பட்ட சான்றினை முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்)
3. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள், டையாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்கள், இருதய, மூளைகட்டி அறுவை சிகிச்சை செய்தவர்கள், புற்றுநோயாளிகள்.
4. இராணுவத்தில் பணிபுரிபவர்களின் மனைவியர்.
5. விதவைகள்/மனைவியை இழந்தவர்கள்/40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத பெண் பணியாளர்கள் மற்றும் சட்டப்படி விவாகரத்து பெற்ற பெண் பணியாளர்கள்.
6. கணவன் /மனைவி முன்னுரிமை.

30.06.2024 அன்றைய நிலையில் ஒரே பணியிடத்தில் 3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் பணியாளர் விவரங்களை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

மூன்றாண்டு பணிமுடித்த பணியாளர்கள் கட்டாய மாறுதலுக்குத் தகுதியுடையவராய் இருந்த போதிலும் (30.06.2024 நிலவரப்படி) ஓய்வு பெற ஓராண்டு இருக்கும் பணியாளர்கள் இம்மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள தேவையில்லை. கட்டாய மாறுதல் கலந்தாய்வு மேற்கண்ட முன்னுரிமையை பின்பற்றி நடத்திய பின் விருப்ப மாறுதல் கலந்தாய்வினை மேற்கண்ட முன்னுரிமை அடிப்படையில் நடத்த வேண்டும்.

மாறுதல் விண்ணப்ப படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முன்னுரிமை (Priority) அடிப்படையில் விண்ணப்பத்தில் காரணம் குறிப்பிடும்போது அதற்குரிய சான்றிதழ்கள் முதன்மைக் கல்வி அலுவலரால் சரிபார்த்திடல் வேண்டும்.

**மாறுதல் கோரும் பணியாளர்களின் பணிமூப்பு (Seniority) நிர்ணயம் செய்ய வேண்டும்.**

- மாறுதல் வழங்கக் கோரும் பணியாளர்களின் பணிமூப்பு (Seniority) படி பட்டியல் தயாரித்து கலந்தாய்வு தொடங்குவதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். (3 ஆண்டுகளுக்கும் மேல் உள்ள பணியாளர்கள்/ விருப்பமாறுதல் கோரும் பணியாளர்கள் பட்டியல் தனித்தனியாக).

- நிரப்பத்தகுந்த காலிப்பணியிட விவரங்களை (Eligible Vacancy Only) கலந்தாய்விற்கு முன்னர் அனைத்து அலுவலர்களுக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

www.Padasalai.Net

முன்னுரிமைக்குப்பின் (Priority) ஒன்றுக்கு மேற்பட்டோர் இருப்பின் கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறை.

அ) தற்போது பணிபுரியும் பணியிடத்தில் பணியில் சேர்ந்த நாள்.

ஆ) பணியில் சேர்ந்த நாள் ஒன்றுக்குமேற்பட்டோருக்கு ஒரே நாளாக இருப்பின் பணிவரன்முறை நாள் / பணிவரன்முறை ஒன்றாக இருப்பின் அவருடைய பிறந்த நாள்.

இ) பிறந்த நாள் ஒரே நாளாக இருப்பின் பெயரின் அகர வரிசை

பணிபுரியும் அலுவலகம் / பள்ளியில் 3ஆண்டுக்கு மேல் ஒரே பணியிடத்தில் பணிபுரியும் பணியாளர் கலந்தாய்வில் பங்கு பெறாத நிலையில், அன்னாருக்கு வேறு ஒரு அலுவலகத்திற்கு நிருவாக மாறுதல் கட்டாயமாக அளிக்கப்பட வேண்டும்.

மூன்றாண்டுகளுக்கு மேற்பட்டவர்களுக்கு மாவட்டத்திற்குள் மாறுதலில் செல்வதற்கான வாய்ப்பு இல்லாதபட்சத்தில் அப்பணியாளர்களது பட்டியலை பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

3ஆண்டுக்கு மேல் பணிபுரியும் பணியாளர்களுக்கான கலந்தாய்வுக்குப் நடத்தி முடிக்கப்பட்ட பின்னர் மீதமுள்ள காலிப் பணியிடங்களில் ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட மாவட்டத்திற்குள் மாறுதல் கோரும் பணியாளர்களுக்கு விருப்ப மாறுதல் கலந்தாய்வு தனித்தனியாக நடத்த வேண்டும். மேலும் மனமொத்த மாறுதல் கோரும் பணியாளர்களின் விண்ணப்பங்களும் பரிசீலனை செய்து ஆணை வழங்க வேண்டும்.

மாறுதலுக்கு விண்ணப்பிக்கும் பணியாளர்கள் உள்மாவட்டம் / மாவட்டம் விட்டு மாவட்டம் ஆகிய இரு கலந்தாய்விற்கும் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவர்கள் உள்மாவட்டத்திற்குள் நடைபெறும் கலந்தாய்வில் கலந்து கொண்டு மாறுதல் ஆணை பெற்றவர்கள் மாவட்டம் விட்டு மாவட்ட கலந்தாய்வில் கலந்து கொள்ள இயலாது.

கலந்தாய்வில் கலந்துகொண்டு மாறுதல் பெற்ற பணியாளர்களுக்கு முதன்மைக் கல்வி அலுவலரால் ஒப்பமிடப்பட்ட ஆணை மின்னஞ்சல் வழியாக சார்ந்த பள்ளி / அலுவலர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

அவ்வாறு பெறப்பட்டஆணையில் சார்ந்த அலுவலகத் தலைவர் மேலொப்பமிட்டு சார்ந்த பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

மாவட்டத்திற்குள்ளாக கலந்தாய்வு முடிந்த பின்னர் மாவட்டம் விட்டு மாவட்டத்திற்கான மாறுதல் கலந்தாய்வு நடத்தப்படும்.

www.Padasalai.Net

கலந்தாய்விற்குப்பின் மாவட்ட அளவில் உள்ள காலிப்பணியிட விவரங்களை (Resultant Vacancy) பதவி வாரியாக தனித்தனியாகப் பட்டியலிட்டு இயக்ககக மின்னஞ்சல் முகவரிக்கு மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்/ கண்காணிப்பாளர்/பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் ஆகிய பணியிட விபரங்களை அ3மின்னஞ்சல் முகவரிக்கும் (a3sec.tndse@gmail.com), உதவியாளர்கள்/இளநிலை உதவியாளர்கள்/ தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகிய பணியிட விபரங்களை (cosea4sec@gmail.com) அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

பார்வை (1)ல் காணும் அரசாணை மற்றும் (2)ல் காணும் இவ்வியக்ககச் செயல்முறைகளில் தெரிவித்துள்ள நெறிமுறைகளை தவறாது பின்பற்றி இணைப்பில் கண்டுள்ளவாறு அந்தந்த நாட்களில் கலந்தாய்வு எவ்வித புகாருக்கும் இடமின்றி நன்முறையில் கலந்தாய்வினை செவ்வனே செயல்படுத்திட அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தலாகிறது.

12/07/24

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

12/07/2024

பெறுநர் :-

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் (மின்னஞ்சல் வழியாக)

நகல் :-

1. உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 6.
2. இயக்குநர்,தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை 6
3. இயக்குநர்,தனியார்பள்ளிகள் இயக்ககம்,சென்னை 6.
4. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6.
5. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை -6

} பணிந்தனுப்பப்படுகிறது

6. மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை 6.
7. இவ்வியக்கக அ2 பிரிவிற்கு
8. EMIS ஒருங்கிணைப்பாளர்,மாநில திட்ட இயக்ககம்,சென்னை-06.
9. சம்பந்தப்பட்ட பிரிவுகள்(அ2,அ3,அ4)
10. தகவல் பலகைக்கு,

www.Padasalai.Net

இணைப்பு.1

| தேதி | பதவி | மாறுதல் நடைபெறும் விபரம் | கலந்தாய்வு நடத்தும் அலுவலர் |
|---|---|---|---|
| 16.07.2024 | நேர்முக உதவியாளர்/ கண்காணிப்பாளர்/ பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் உதவியாளர்/ இளநிலை உதவியாளர்/ தட்டச்சர்/ சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III | மாவட்டத்திற்குள் மாறுதல் (Over three years transfer)<br>மாவட்டத்திற்குள் விருப்ப மாறுதல் (Willing Transfer) (ஓராண்டிற்கு மேல்) மனமொத்த மாறுதல் | முதன்மைக் கல்வி அலுவலர் GOOGLE MEET மூலம் |
| 18.07.2024 | நேர்முக உதவியாளர்/ கண்காணிப்பாளர்/ பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் உதவியாளர்/ இளநிலை உதவியாளர்/ தட்டச்சர்/ சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை I/II/III | மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல்/மாவட்டம் விட்டு மாவட்டம் விருப்ப மாறுதல்/ மனமொத்த மாறுதல் | பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர தொகுதி) GOOGLE MEETமூலம் |
| 19.07.2024 | இளநிலை உதவியாளர்/தட்டச்சர் பணியிடங்களிலிருந்து உதவியாளராக பதவி உயர்வு/சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III பதவியிலிருந்து உதவியாளராக பணி மாறுதல் (15.03.3024 நிலவரப்படியான பட்டியலின்படி முன்னுரிமை எண் 1 முதல 110 வரை) | பதவி உயர்வு வழங்குதல் | பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர தொகுதி) GOOGLE MEETமூலம் |

14/07/24

இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி)

12/07/2024